**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 601 of 2012**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : சின்னதுரை** | **Father/Husband's Name : ராஜமநாயக்கர்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A9, A13, A16, A17, A18 Split up. A6, A7, A10, A11, A14, A15 died. A4, A5, A8, A21 present. A2, A3, A12, A19, A20 absent. Petition filed and allowed.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது காவலப்பட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 பாலகிருஷ்ணன் த/பெ.கிருஷ்ணசாமி என்பவரை எனக்கு தெரியாது. கடந்த 20 வருடங்களுக்கு முன்பு கரடிகூட்டத்தில் Society Electionல் நான் உறுப்பினர் பதவிக்கு போட்டியிட்டேன். அப்போது நான் கரடிகூட்டத்தில் உள்ள Society முன்பு நின்றிருந்தபோது உள்ளே போக முடியவில்லை, உள்ளே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரிகள் தண்டபானி, காளிமுத்து, ராஜா, ரங்கசாமி த/பெ.சுப்பாநாயக்கர், கோபாலகிருஷ்ணன் ஆகியோர்களை எனக்கு தெரியும். வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள். **(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி விசாரிக்க அனுமதி கோரப்பட்டு அது அனுமதிக்கப்பட்டதன் பேரில் அரசு தரப்பில் குறுக்குவிசாரணை)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2. கடந்த 07.07.2007ம் தேதி காலை 11.00 மணிக்கு 13.56 கரடிகூட்டம் வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தேர்தல் நடைபெற்றது. அப்போது தேர்தல் நடத்தும் அதிகாரி பாலகிருஷ்ணன் தேர்தல் நடத்தி கொண்டிருந்தார் எனவும், ஆஜர் எதிரிகள் தேர்தல் நடத்தும் இடத்தில் நுழைந்து தேர்தல் அதிகாரியையும், மற்ற நபர்களையும் பார்த்து தேர்தல் நடத்தவிடாமல் கம்பு போன்ற ஆயுதங்களை காட்டி வங்கி Recordகளை சேதப்படுத்தியும், தேர்தலை நிறுத்தும்படி திட்டமிட்டு செயல்பட்டார்கள் எனவும்,

போலிஸ் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3. இல்லை.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 17:31:44 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 601 of 2012**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : சிவக்குமார்** | **Father/Husband's Name : பாபுச்சாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A9, A13, A16, A17, A18 Split up. A6, A7, A10, A11, A14, A15 died. A4, A5, A8, A21 present. A2, A3, A12, A19, A20 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி கரடிகூட்டத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த சுமார் 08.07.2007ம் தேதி காலை 6.00 மணியளவில் நானும், சுப்புராயலு என்பவரும் கரடிகூட்டம் கூட்டுறவு சங்கத்தின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சுப்புராயலு என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜர் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.07.20 17:31:52 +0530

**நீதித்துறை நடுவர்,**

**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 601 of 2012**

**Deposition of Witness P.W.3**

| | |
|---|---|
| **Name : சுப்புராயலு** | **Father/Husband's Name : குருசாமி** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A9, A13, A16, A17, A18 Split up. A6, A7, A10, A11, A14, A15 died. A4, A5, A8, A21 present. A2, A3, A12, A19, A20 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது R.வாடிபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். கடந்த சுமார் 08.07.2007ம் தேதி காலை 6.00 மணியளவில் நானும், சிவக்குமார் என்பவரும் கரடிகூட்டம் கூட்டுறவு சங்கத்தின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த போலிசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், சிவக்குமார் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. போலிசார் கேட்டு கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 17:31:58 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**